<u>சுருக்கம்</u>

கூட்டுறவு – நகர கூட்டுறவு வங்கிகளில் செயல்படுத்தப்பட்டு 31.12.2006 உடன் முடிவடைந்த வட்டி குறைப்புத் திட்டத்தின் கால அவகாசத்தை மேலும் நீட்டித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிகே2) துறை

அ.ஆ.(நிலை) எண் 283 நாள் 21.09.2007

படிக்க

1. அரசு ஆணை (3டி) எண் 10 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள் 13.4.05.
2. அரசு ஆணை (3டி) எண்.32, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள் 8.8.05.
3. அரசு ஆணை (3டி) எண் 1, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள் 31.1.06
4. அரசு ஆணை , (நிலை) எண் 105, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிப்பி2) துறை, நாள் 4.4.07.
5. அரசு கடித எண் 13946/சிகே2/07–1, நாள் 18.6.2007.
6. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க.ந.க எண் 116782/06 நவ3, நாள் 18.7.2007.

––––––

<u>ஆணை:</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில், தமிழகத்திலுள்ள நகர கூட்டுறவு வங்கிகளில் 31.3.2001 வரை கடன் வழங்கப்பட்டு நிலுவையாகவுள்ள அனைத்து கடன்களுக்கும் 1.2.2003 முதல் குறைக்கப்பட்ட வட்டி வீதங்களை நடைமுறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், அரசாணை வெளியிடப்பட்ட மூன்று மாதத்திற்குள் வசூலிக்கப்பட வேண்டிய தொகையில் 25 சதவீதம் செலுத்தி ஒப்பந்தம் மேற்கொண்டால், மீதமுள்ள 75 சதவீத தொகையினை அரசாணை வெளியிடப்பட்ட ஒன்பது மாதத்திற்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என ஆணை வழங்கப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் இத்திட்டம் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கும் நகரக் கூட்டுறவு சங்கங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் 25 சதவீதம் தொகையைச் செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான கால அவகாசம் 30.6.2006 வரையிலும் மீதமுள்ள 75 சதவீதம் தொகையைச் செலுத்துவதற்கு கால அவகாசம் 31.12.2006 வரையிலும் நீட்டிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் 25 சதவீதம் தொகையை செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான கால அவகாசம் 30.06.2007 வரையில் நீட்டிக்கப்பட்டு மீதமுள்ள 75%

தொகையினை செலுத்துவதற்கு கால அவகாசம் 31.12.07 வரையிலுமாக மீண்டும் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. மேலே பார்வை ஐந்தில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் நகர கூட்டுறவு வங்கிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வட்டி குறைப்புத்திட்டம் நகர கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும் விரிவு படுத்தி அரசு தெளிவுரை வழங்கியுள்ளது.

6. மேலே ஆறில் படிக்கப்பட்ட கடிதத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் இத்திட்டத்தின் கீழ் 30.06.2007 முடிய ரூ.217.60 கோடி கடன் வசூலிக்கப்பட்டு 42,620 கடன்தாரர்களுக்கு ரூ.39.23 கோடி வட்டி தள்ளுபடிச் சலுகை வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் அரசாணை (நிலை) எண் 105, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிப்பி2) துறை, நாள் 4.4.2007 மற்றும் அரசுக் கடிதம் எண் 13946/சிகே2/2007–1, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள் 18.6.07ல் அரசால் அனுமதிக்கப்பட்ட, 25% தொகையை செலுத்தி வங்கி சங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான கால அளவு 30.6.2007 உடன் முடிவடைந்துள்ள நிலையிலும் வசூல் தொகை குறைந்த அளவில் உள்ளதைக் கருத்திற்கொண்டும். இத்திட்டத்தின் கால அளவை நகரக் கூட்டுறவு வங்கிகள், கலைக்கப்பட்ட நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், 25% தொகையினை செலுத்தும் கால அளவை 30.9.07 வரை நீட்டித்து எஞ்சிய 75% தொகையினை 31.12.2007 வரை செலுத்துவதற்கு அனுமதித்து அரசு ஆணையினை வழங்கும்படி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

7. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்தது. தமிழகத்தில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகளில் செயல்படுத்தப்பட்டு 31.12.2006 உடன் முடிவடைந்த வட்டிக் குறைப்புத் திட்டத்தின் கால அளவை 30.09.07 வரை நீட்டித்தும் எஞ்சிய 75 சதவீத தொகையினை திருப்பிச் செலுத்திட கால அளவை 31.12.2007 வரையிலும் நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. மச்சேந்திரநாதன்,
அரசு செயலாளர்

பெறுநர்

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் , சென்னை – 10.
இயக்குநர், தமிழ்நாடு மாநில நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம்,
சென்னை – 10.
தனி அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மாநிலத்தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னை – 1.

நகல்

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் ( கூட்டுறவு) அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிசி, சிஎம், சிஎன், சிஜி) துறை,
சென்னை – 9.
நிதித்துறை, சென்னை – 9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.